# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் III பரீட்சை – 2022 யூலை

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

(303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும் 09 கட்டாய கேள்விகளை உள்ளடக்கியது. இவ் வினாத்தாள் மூன்று பகுதிகளை கொண்டது. பகுதி யு 05 புள்ளிகளைக் கொண்ட நான்கு கட்டாய வினாக்களையும். பகுதி டீ 10 புள்ளிகளை கொண்ட மூன்று கட்டாய வினாக்களையும் பகுதி ஊ 25 புள்ளிகளைக் கொண்ட இரண்டு கட்டாய வினாக்களையும் கொண்டது.

சில வினாக்களுக்கு விடை அளிக்கப்படாத போதிலும் பெரும்பான்மையான தேர்வுநாடிகள் எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்க முயற்சித்துள்ளனர். விடை அளிக்காமை பிழையான நேர முகாமை, பாடவிதானத்தில் போதிய அளவு அறிவின்மை மற்றும் கேள்வியை பிழையாக விளங்கிக் கொண்டமை போன்றவையால் ஆகும்.

**பொதுவான செயலாற்றுகை மட்டம் சராசரி மட்டத்தில் உள்ளது.**

### பகுதி A

**வினா எண் 01**

இவ்வினா வணிகச் சூழல் தொடர்பான அறிவை பரீட்சிக்கிறது. இது மரக்கறி உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் **அக்ரோ லைப்** நிறுவனத்தின் வணிக நடவடிக்கைகளில் தரப்பட்டுள்ள காரணிகளின் பாதிப்பு தொடர்பிலானது. பொதுவில் எல்லா தேர்வுநாடிகளும் இக் கேள்வியை முயற்சித்துள்ளனர், அதில் பெரும்பாலானோர் முழுமையான புள்ளிகளை எடுத்துள்ளனர். எனினும் சிலர் தேவையற்ற விதத்தில் அதிகமான விடையை அளிக்க முற்பட்டு நேரத்தை வீணடித்துள்ளனர்.

தேர்வுநாடிகள் திருப்திகரமான புள்ளிகளை பெற பின்வரும் பகுதிகளில் போதிய அறிவை கொண்டிருக்க அறிவுறுத்தப்படுகின்றனர்.

- அகப்புற வணிகச் சூழல்
- அகப்புறச் சூழல் சக்திகள் - வளங்களும் இயலுமைகளும்
- PESTEL காரணிகள் - அரசியல் (அரசியல் ஸ்திரத்தன்மை, வரிக் கொள்கை)

  பொருளியல் (பணவீக்கம், வட்டி வீதம், பணமாற்று வீதம்)

  சமுகம், தொழில்நுட்பம், சூழல் மற்றும் சட்டம்

**பொதுவான இவ்வினாவுக்கான செயலாற்றுகை மட்டம் திருப்திகரமாக உள்ளது**

## வினா எண் 02

இவ்வினாவின் பகுதி (a) இடர் முகாமைத்துவ சட்டகத்தின் 03 வாய்ப்புகளை அல்லது நன்மைகளை கோருகிறது. பாடநூலில் ஐந்து நன்மைகள் தெளிவான விளக்கத்தோடு வழங்கப்பட்டுள்ளன.

எனினும் விடைகள் சராசரி மட்டத்தில் காணப்படுவதோடு பெரும்பான்மையான தேர்வு நாடிகள் தொடர்பில்லாத கீழ்வரும் போன்ற விடைகளை வழங்கியுள்ளனர்.

- கணக்காய்வு கருத்துரைகளை வெளிப்படுத்தல்
- இடரைக் குறைக்க பகிர மாற்ற முடியும்
- தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவை மதிப்பிடல்

பகுதி (b) தகவல் தொழில்நுட்பத்தோடு தொடர்புபட்ட இரண்டு இடர் முகாமைத்துவக் கருவிகளை இனங்கான கேட்கிறது. கேள்விக்கு மாணவர்களின் விடைகள் திருப்திகரமாக அமையவில்லை.

தேர்வுநாடிகள் பின்வரும் பகுதிகளில் தமது அறிவை விருத்தி செய்வதன் மூலம் அதிக புள்ளிகளை பெற முடியும்.

- அகப்புற இடர்கள்
- இடரைக் குறைக்கும் நுட்பங்களும் இடர் முகாமைத்துவ கருவிகளும்
- இடர் முகாமைத்துவத்தின் நன்மைகளும் இடர் முகாமைத்துவ சட்டகத்தை பயன்படுத்துவதில் உள்ள இடர்களும்

**பொதுவான இவ்வினாவுக்கான செயலாற்றுகை மட்டம் திருப்திகரமாக உள்ளது**

## வினா எண் 03

இவ்வினா உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் உடன் தொடர்புபட்டது. பகுதி (a) உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலை வரையறை செய்ய வேண்டுகிறது மேலும் பகுதி (b) உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலில் முக்கிய மூன்று கூறுகளை வழங்கப்பட்ட விவரத்துடன் தொடர்புபடுத்தி அடையாளம் காண கேட்கிறது.

இவ்வினா நேரடியானது நேரடி விடையை வழங்க கூடியதாக இருந்தது.

விடைகள் சராசரி மட்டத்தில் இருந்தன ஏனெனில் தேர்வு நாடிகளுக்கு உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் தொடர்பில் பொதுவான அறிவு இருந்த போதிலும் இப்பாடம் தொடர்பான புரிந்துணர்வு குறைவாக காணப்பட்டது. ஆதலால் தேர்வு நாடிகள் உறுதிப்பார்த்து ஈடுபடுத்தலை வரையறை செய்யும்போது பின்வரும் முக்கிய பதங்களை பயன்படுத்தவில்லை.

- பயிற்சியாளர்
- போதுமான தக்க சான்றுகள்
- முடிவை வெளிப்படுத்தல்

- நம்பிக்கையை அதிகரித்தல்
- எதிர்பார்க்கப்பட்ட பயனர்கள்
- விடயதானங்கள்
- சில நிபந்தனைகள்

இப்பகுதியில் போதிய அளவு புள்ளிகளைப் பெற மாணவர்கள் கலைச்சொற்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் அவற்றை புரிந்து கொள்ளவும் வேண்டப்படுகிறார்கள்.

இரு பகுதிகளையும் முயற்சி செய்த தேர்வு நாடிகள் பொதுவில் (a) பகுதியோடு ஒப்பிடும்போது (b) பகுதியில் அதிக புள்ளிகளை பெற்றுள்ளனர். எனினும் பெரும்பாலான தேர்வு நாடுகள் (a) பகுதியில் நியதிச் சட்ட கணக்காய்வு தொடர்பில் கதைத்ததன் மூலம் புள்ளிகளை இழந்துள்ளனர்.

வழங்கப்பட்ட விபரணத்தில் சரியான கூறுகளை இனம் கண்டவர்கள் (டி) பகுதியில் முழுமையான புள்ளிகளை பெற்றுள்ளனர்.

**பொதுவான இவ்வினாவுக்கான செயலாற்றுகை மட்டம் திருப்திகரமாக உள்ளது**

**வினா எண் 04**

இவ்வினா கணக்காய்வு நிறுவனம் ஒன்றில் தரக் கட்டுப்பாடு செயல்முறைகள் தொடர்பிலான அறிவை பரீட்சிக்கிறது. பகுதி (a) ஏற்பதற்கும் தொடர்வதற்குமான தேவைப்பாடுகள் இரண்டை வேண்டுகிறது. பகுதி (b) கண்காணிப்பு தொடர்பிலான இரண்டு செயற்பாடுகளை வேண்டுகிறது இது முழுமையாக கருத்தியல் (theoretical) கேள்வியாகும்.

சரியான விடைகள் அளிக்கப்படவில்லை. பெரும்பான்மையான மாணவர்கள் கீழ்வருவன போன்ற தொடர்பற்ற விடைகளை அளித்துள்ளனர்.

- ஈடுபடுத்தல் கடிதத்தை வழங்கள்
- கட்டணங்களும் பட்டியல்களை உருவாக்கலும்
- ஆவணப்படுத்தல்

**பகுதி (b)** கண்காணிப்பு தொடர்பிலான இரண்டு செயற்பாடுகளை வேண்டுகிறது. திருப்தியான விடைகள் அளிக்கப்படவில்லை. பெரும்பான்மையான மாணவர்கள் கீழ்வருவன போன்ற தொடர்பற்ற விடைகளை அளித்துள்ளனர்.

- கண்காணிப்பு (observation)
- இடர் மதிப்பீடு
- நாளாந்த செயற்பாடுகளை முகாமை செய்தல்
- மேற்பார்வையும் மீளாய்வும்

தேர்வு நாடிகள் பின்வரும் பகுதிகளில் தமது அறிவை விருத்தி செய்ய வேண்டும்:

- தரக் கட்டுப்பாட்டு மீளாய்வின் கூறுகள், இலக்குகள் மற்றும் முக்கியத்துவம்
- சுதந்திரத்தன்மை
- நிதி கூற்று கணக்காய்வில் தரக் கட்டுப்பாட்டு தேவைப்பாடுகள்
- சேவைநாடுனரான உறவில் ஏற்ற தொடர்களும் மற்றும் கணக்காய்வு உறவு மற்றும் கணக்காய்வு ஈடுபாடு

**பொதுவான செயலாற்றுகை மட்டம் சராசரி மட்டத்தில் உள்ளது**

## <u>பகுதி B</u>

**வினா எண் 05**

இவ்வினா மூன்று பகுதிகளைக் கொண்டது. **பகுதி (a)** கணக்காய்வு சான்றுகளின் போதுமையையும் பொருத்தத்தன்மையையும் விளக்கக் கோருகிறது. விடைகள் சராசரி மட்டத்தில் காணப்பட்டன. சிலர் சரியான விடையை வழங்கியபோதும் விளக்கம் அளிக்கவில்லை. சிலர் மெய்யானதும் நியாயமானதுமான நிதி தகவல்கள், சான்றுகளற்ற பொருண்மையான பிறழ்கூற்று போன்ற பொதுவான விடைகளை அளித்திருந்தனர். இவர்களுக்கு புள்ளிகள் வழங்கப்படவில்லை.

**பகுதி (b)** பொருண்மை பிறழ்கூற்றின் இடருக்கும் கணக்காய்வு சான்றுகளின் போதுமைக்கும் பொருத்தத்தன்மைக்கும் இடையான தொடர்பை விளக்க வேண்டுகிறது. மிகச் சில மாணவர்களே சரியான விடையை அளித்து முழுமையான புள்ளிகளை பெற்றனர்.

**பகுதி (c)** உறவுமுறை தரப்பினர் தொடர்பில் நான்கு கணக்காய்வு நடைமுறைகளை இனங்காண வேண்டுகிறது. விடைகள் சராசரியை விட குறைவாக காணப்பட்டன. கணிசமான மாணவர்கள் பொதுவான கணக்காய்வு கீழ்வரும் நடைமுறைகளை குறிப்பிட்டு இருந்தனர்.

- விசாரணை
- பரீட்சிப்பு
- கண்காணிப்பு
- மீள்கணிப்பு

இவர்களுக்கு புள்ளிகளை எதுவும் வழங்கப்படவில்லை.

**பொதுவான செயலாற்றுகை மட்டம் சராசரி மட்டத்தில் உள்ளது**

**வினா எண் 06**

இவ்வினா மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளதோடு கணக்காய்வு அறிக்கை வலியுறுத்தல் விடயம் பாதகமான அபிப்ராயம் தொடர்பில் மாணவர்களின் அறிவை பரீட்சிக்கிறது.

**பகுதி (a)** கணக்காய்வு அறிக்கையின் நான்கு கூறுகளை கோருகிறது. இது மிக இலகுவான கேள்வியாக அமைந்ததால் பெரும்பாலானோர் முழுப் புள்ளிகளை பெற்றனர்.

சில மாணவர்கள் கீழ்வரும் தொடர்புற்ற விடைகளை வழங்கி புள்ளிகளை பெறவில்லை.

- கணக்காய்வு சான்றுகள்
- சாதாரண நூலின் அல்லது அறிக்கையின் பகுதிகள்

**பகுதி (டி)** வலியுறுத்தல் விடயத்தின் பொருளை கோரி இருந்தது எனினும் பெரும்பான்மையான மாணவர்கள் திருப்தியான பதிலை அளிக்கவில்லை.

**பகுதி (c)** பாதகமான அபிப்பிராயத்தை நிதி கூற்றுக்கள் மீது வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களை விளக்கச் சொல்லி கோரி இருந்தது. எனினும் பெரும்பான்மையான மாணவர்கள் திருப்தியான பதிலை அளிக்கவில்லை.

மாணவர்கள் பின்வரும் பகுதிகளில் தமது அறிவை விருத்தி செய்ய அறிவுரை வழங்கப்படுகின்றனர்

- கணக்காய்வு அறிக்கையின் கூறுகள்
- கணக்காய்வு அபிப்பிராயங்கள்
- வலியுறுத்தல் விடையப்பந்தி மற்றும் ஏனைய விடையப் பந்திகள்

**பொதுவான இவ்வினாவுக்கான செயலாற்றுகை மட்டம் திருப்திகரமாக உள்ளது**

## வினா எண் 07

**பகுதி (a)** அடிப்படை ஒழுக்கநெறி கோட்பாடுகளுடன் இணங்குவதற்கான அச்சுறுத்தல்கள் 03 ஐ வழங்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கோரி இருந்தது. விடைகள் சராசரி மட்டத்தில் இருந்தன. நலம் மாணவர்கள் சுதந்திரத்தன்மையுடன் இணங்குவதற்கு காணப்படும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் எழுதி இருந்தனர். சில மாணவர்கள் சரியாக அச்சுறுத்தல்களை எழுதி இருந்த போதிலும் அவற்றை தரப்பட்ட தகவல்களுடன் தொடர்புபடுத்தவில்லை.

**பகுதி (b)** நிறுவன ரீதியான பாதுகாப்பு ஏற்பாடுகள் நான்கை கோரி இருந்தது. விடைகள் சராசரி மட்டத்தை விட குறைவாக காணப்பட்டன. மாணவர்கள் ஈடுபாடுடன் தொடர்பான பாதுகாப்பு தொடர்பில் குறிப்பிட்டு இருந்தனர்.

ஒழுக்க நெறி தொடர்பில் 10 வீத புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது மாணவர்கள் பின்வரும் பகுதிகள் தொடர்பில் தெளிவான அறிவைப் பெற்றிருக்க அறிவுறுத்தப்படுகின்றனர்.

- விழுமியங்களுடன் கூடிய நடவடிக்கைகளில் முக்கியத்துவம்
- வணிக விழுமியங்களில் அடிப்படை கோட்பாடுகள்
- சுதந்திரத் தன்மைக்கும் விழுமிய தேவைப்பாட்டுக்குமான அச்சுறுத்தல்கள்
- நிறுவன ரீதியான மற்றும் ஈடுபாடு தொடர்பான காப்பு

**பொதுவான செயலாற்றுகை மட்டம் சராசரி மட்டத்தில் உள்ளது**

## பகுதி C

**வினா எண் 08**

இவ்வினா நிறுவனத்தின் ஒட்டுமொத்த கணக்காய்வு தந்திரோபாயம் தொடர்பான விடயங்களை இனங்கான கேட்டிருந்தாலும் பெரும்பாலான மாணவர்கள் குறைவாகவே பதில் அளித்து இருந்தன மேலும் அவர்களின் விடைகள் தரப்பட்ட தரவுகளுடன் பொருந்தி காணப்படவில்லை எனவே முழுமையாக புள்ளிகளை வழங்க முடியவில்லை. எல்லா உதாரணங்களும் கேள்விலேயே வழங்கப்பட்டிருந்தால் சில மாணவர்கள் சரியான விடைகளை வழங்கவில்லை.

சில மாணவர்களுக்கு கணக்காய்வு தந்திரோபாயம் மற்றும் இதை கணக்காய்வின் ஆரம்ப கட்டத்தில் எவ்வாறு பிரயோகிப்பது தொடர்பில் போதிய அறிவு இருக்கவில்லை. இது மாணவர்களின் புள்ளிகள் குறைய முக்கிய காரணமாகும்.

**பகுதி (b)** யில் விடைகள் சராசரி மட்டத்தில் காணப்பட்டன. இதற்கு முக்கிய காரணம் மாணவர்களுக்கு நடைமுறை செயற்பாட்டு கோப்புகளையும் நிரந்தர கணக்காய்வு கோப்புகளை பேணுவதற்கான காரணங்கள் தொடர்பில் போதிய அறிவின்மையாகும். சில மாணவர்கள் நடைமுறை செயற்பாட்டு கோப்புகளை பட்டியலிட்டு இருந்தனர். உதாரணமாக கொடுப்பனவு கைச்சாத்து, விலைப்பட்டியல், நிதிக்கூற்றுக்கள்

**பகுதி (c)** பொருண்மை ஏன் முக்கியம் என்பதற்கு நான்கு காரணங்களை கேட்கிறது. இது ஒரு நேரடி கேள்வியாகும் எனினும் விடைகள் சராசரி மட்டத்திலே காணப்பட்டன.

சில மாணவர்கள் கீழ்வரும் தொடர்பற்ற விடைகளை வழங்கி இருந்தனர்.

- வழுக்களை திருத்துவதற்கு
- நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு

**பகுதி (d)** கணக்காய்வு தொடர்பில் பெறக்கூடிய நான்கு எழுத்து மூல பிரதிநிதித்துவங்களை இனங்காண கேட்டிருந்தது. பொருத்தமற்ற விடைகள் வழங்கப்பட்டிருந்தன இதற்கு காரணம் மாணவர்களின் குறைவான தொழில்நுட்ப அறிவாகும்.

## பகுதி (D)

இங்கு அகக்கட்டுப்பாட்டில் காணப்படும் குறைபாடுகளை விளக்கச் சொல்லி கேட்கப்பட்டிருந்தது. பல மாணவர்கள் இக்கேள்விக்கு விடை அளித்திருந்தாலும் சில மாணவர்களே துல்லியமான விடைகளை அளித்திருந்தனர். பல மாணவர்கள் அகக்கட்டுப்பாடு தொடர்பில் தமது பொதுவான அறிவைக் கொண்டு விடையளித்திருந்தனர். எனவே மாணவர்கள் இப்பகுதியில் தமது அறிவை வளர்த்துக் கொள்ள மற்றும் சரியான கலைச் சொற்களை அறிந்து கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர்.

இவ்வினா அகக்கட்டுப்பாட்டில் காணப்படும் குறைபாடுகளின் தாக்கங்களை மதிப்பிட கேட்கிறது. பெரும்பாலான மாணவர்கள் குறைபாடுகளை இனங்கண்ட போதிலும் அவற்றின் தாக்கங்களை மதிப்பிடத் தவறி உள்ளனர். இது மாணவர்கள் கருத்தியல் அறிவை நிஜ வணிக சூழலில் பயன்படுத்துவது உள்ள குறைபாட்டை காட்டுகிறது.

**பொதுவான இவ்வினாவுக்கான செயலாற்றுகை மட்டம் திருப்திகரமாக உள்ளது**

வினா எண் 09

பகுதி A

(a) இவ்வினாவில் நீங்கள் ஜாலியா நிறுவனத்தின் அகக் கட்டுப்பாட்டு முறைமையில் பலவீனமாக உள்ள கூறுகளை ஏற்பிசைவு செய்ய கேட்கப்படுகிறீர்கள். விடைகள் திருப்தியாக இல்லை. பெரும்பாலான மாணவர்கள் பலவீனமான கூறுகளை இனங்கண்டபோதிலும் அவற்றை தரப்பட்ட தரவுகளோடு தொடர்புபடுத்த முடியாமல் காணப்பட்டுள்ளனர். மாணவர்கள் கடந்த கால வினாக்களை பயிற்சி செய்வதன் மூலம் இப்படியான கேள்விகளுக்கு சரியாக விடை எழுத முடியும்.

(b) இவ்வினா உறுதியான அக்கட்டுப்பாட்டு முறைமையின் முக்கியத்துவத்தை விளங்கப்படுத்த கேட்கிறது. இதற்கான விடை பாடநூலில் தரப்பட்டுள்ளது எனவே பாடநூலை சரியாக கற்கும்படி மாணவர்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

(c) இங்கு மாணவர்கள் அகக்கட்டுப்பாட்டு முறைமையின் இரண்டு உள்ளார்ந்த வரையறைகளை இனங்கான கேட்கப்படுகிறார்கள்.

**பொதுவான செயலாற்றுகை மட்டம் சராசரி மட்டத்தில் உள்ளது**

பகுதி B

இங்கு **பகுதி (a) ஜாலியா நிறுவனத்தின்** காசு முகாமை முறைமையில் காணப்படும் அகக்கட்டுப்பாட்டு பலவீனங்கள் ஐந்தை இனங்கான கேட்கப்படுகிறீர்கள் மேலும் **பகுதி (b)** யில் அப்பலவீனங்களை இல்லாமல் செய்ய விதந்துரைகளை வழங்க கோரப்படுகிறீர்கள். விடைகள் திருப்திகரமாக காணப்பட்டன.

சில மாணவர்கள் கேள்வியில் வழங்கப்பட்டுள்ள தரவுகளை அக கட்டுப்பாட்டின் பலவீனங்களை அடையாளம் காணாது மீண்டும் வழங்கியிருந்தனர் மேலும் சிலர் பலவீனங்களை இனங்கானது விதந்துரைகளை வழங்கியிருந்தனர்.

இப்படியான கேள்விகளுக்கு விடை எழுத பின்வரும் அறிவுரைகளை பின்பற்ற வேண்டும்

- கேள்வியை குறைந்தது இருமுறை வாசிக்கவும்
- முக்கியமான பிரச்சனைகளை இனங்காண்பதோடு அவற்றை அக கட்டுப்பாடு தொடர்பான அறிவைக் கொண்டு ஏறுவரிசைப்படுத்த வேண்டும்.
- சரியான விதந்துரைகளை வழங்க வேண்டும்.

இப்பகுதியில் தலா ஒரு உதாரணத்தோடு இரண்டு தகவல் தொழில்நுட்ப கட்டுப்பாடுகளை வழங்கும் படி கேட்கப்படுகிறீர்கள். விடைகள் சராசரி மட்டத்தில் காணப்பட்டன.

**பொதுவாக இவ்வினாவுக்கான செயலாற்றுகை மட்டம் திருப்திகரமாக உள்ளது**

## தேர்வு நாடிகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்த கவனத்தில் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்

1. பாடநூலை கவனமாக வாசித்து அதில் வழங்கப்பட்டுள்ள பகுதிகள் விளங்கிக் கொள்ள வேண்டும்
2. இப்பாடத்துடன் தொடர்புடைய நூல்கள் கையேடுகள் மடல்கள் நாட்குறிப்புகளை வாசிக்கவும்
3. செயல் வினைச் சொற்களின் வரைவிலக்கணங்களை விளங்கிக் கொள்வதோடு அச்செயல் வினைச் சொற்களுக்கு அமைவாக கேள்விகளுக்கு விடை அளிக்க பயிற்சி செய்தல்
4. குறைந்தது கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்கான கடந்த கால வினாக்களை பயிற்சி செய்வதோடு எவ்வாறு கேள்விகள் தயாரிக்கப்படுகின்றன என்பதை புரிந்து கொள்ளல்
5. கேள்வியில் வழங்கப்பட்டுள்ள கருத்தியல்களையும் அவற்றின் பிரயோகங்களையும் புரிந்து கொள்ளல்
6. கடந்த கால வினாத்தாள்களில் பரிட்சிக்கப்பட்ட பாடநூலில் காணப்படும் பகுதிகளில் சிறு குறிப்புகளை எடுத்து அவற்றை தெளிவாக விளங்கிக் கொள்ளல்
7. கடந்த கால வினாத்தாள்களை நேரத் திட்டமிடலுடன் விடை அளித்து பழகல்
8. பாடநூலில் காணப்படும் அத்தியாயங்களுக்கு சிறு குறிப்பு எடுத்து அவற்றை மனப்பாடம் செய்தல்
9. விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுத பழகல்
10. கேள்விகளுக்கு விடை அளிக்க முன் அறிவுறுத்தல்களை தெளிவாக வாசித்தல்
11. சரியான மனநிலையில் பரீட்சை எழுதல்
12. புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கேள்விக்கும் ஆன நேர ஒதுக்கீட்டை தீர்மானித்தல்
13. விடைத்தாள்களை கையளிக்கும் முன் எல்லா வினாக்களுக்கும் சரியாக விடையளிக்கப்பட்டுள்ளதா மேலும் இலக்கங்கள் சரியாக இடப்பட்டுள்ளது என இரு முறை பார்த்தல்.